மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 20 வருஷங்களாக அதைக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், அதில் எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பது தெரிகிறது. இருந்தாலும், அதைப் பற்றி ஆராய்வதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது.

இடைநிலை தமிழ் ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு.

*வினா எண். 615—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முதல் நிலை தமிழ் ஆசிரியராக தன் தகுதியை உயர்த்திக் கொண்ட இடைநிலை ஆசிரியர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்க உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இக்கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியத்தை உயர்த்துவது எப்போது முதல் செயலுக்கு வரும்? அப்படி செயலுக்கு வருகின்ற தருவாயில் இடைநிலை ஆசிரியர்களுக்கு 20 ஆண்டுகள் ஊழிய காலத்திற்கு சிறப்புநிலை வழங்கவேண்டுமென்ற உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசியர்களுக்கு புலவர் பட்டம் பெற்றால் ஊக்க ஊதியம் தரப்படுமா என்பது தான் மூலக்கேள்வி. அது பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் சொல்லியிருக்கிறேன். பரிசீலனை முடிந்த பின் முடிவிற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். மேற்கொண்டு எதுவும் சொல்வதற்கில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு பேருந்திலே கல்விப் பயணம் செய்ய அரைக் கட்டண சலுகை வழங்கும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

1981 ஏப்ரல் 3]

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைத் தொடக்கப்பள்ளியில் இருக்கிற 8-வது வகுப்பை உயர்நிலைப்பள்ளியோடு இணைப்பதாக அறிகின்றேன். அப்படியானால் தலைமை ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றப்படுவார்களா ? தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் நிலை என்ன ? அவர்கள் தலைமையாசிரியர்களாக உயர்த்தப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி. இன்னும் அதுபற்றி முடிவு எடுக்கவில்லை. பிற மாநிலங்களில் அந்த முறையைப் பின்பற்றுகின்றார்கள். அது ஒரு சிறந்த முடிவு என்கிற கருத்தின் அடிப்படையிலே அந்தக் கருத்தை எல்லோரும் பேசவேண்டுமென்று சொல்லப்படுகிறது. முடிவு எடுக்கிறபோது நாம் பரிசீலனை செய்வோம்.

திருக்கோவிலூர் கூட்டுறவு நகர வங்கியில் நடைபெற்ற முறைகேடுகள்.

*வினா எண். 616— திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்க் லிமிடெட் இ. 25 1975-ல் சுமார் 45-க்கு மேற்பட்ட முறைகேடுகள் காரணமாக ரூபாய் பல்லாயிரக்கணக்கில் பணம் விரயம் செய்யப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் திருக்கோவிலூர் கூட்டுறவு நகர வங்கி செயல்படும் விதம் பற்றி விசாரணை செய்தபோது பல்வேறு முறைகேடுகள் தெரிய வந்துள்ளன.

(1) 1973 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டுவரை (16—2—1978) வரை வங்கி ஈடுபட்டு வந்த காப்புறுதி வியாபாரத்தில் கிடைத்த இன்ஷூரன்ஸ் கமிஷன் பணத்தை வங்கியின் செயலாளர் எடுத்து கொண்டது ;